**துருசவிய நிதியத் 2012**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான துருசவிய நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

(அ) மீளாய்வாண்டின் போது பணிக்கொடைக் கொடுப்பனவாக ரூபா 374,201 தொகையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பணிக்கொடை ஒதுக்கக் கணக்கில் ரூபா 312,042 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் பணிக்கொடைச் செலவினம் ரூபா 62,159 தொகை குறைத்துப் பதியப்பட்டிருந்ததுடன் இது வேறு படிப்பணக் கணக்கிற்குச் சேர்க்கப்பட்டிருந்தமையால் அக் கணக்கு ரூபா 62,159 கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது அலுமினியம் தகடுகளின் ஆரம்ப மீதியான 215 ஒரு தகடு ரூபா 349 படி ரூபா 75,035 கணிப்பிடப்பட்டுக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது ஒரு தகடு ரூபா 210 படி 128 தகடுகள் விற்பனை செய்யப்பட்டு ரூபா 26,880 கூட்டுத்தொகை வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், இறுதி இருப்பாக எஞ்ச வேண்டிய தகடுகளின் எண்ணிக்கை 87 ஆன போதிலும் 109 தகடுகள் ரூபா 349 படி ரூபா 38,041 இறுதி இருப்பில் காண்பிக்கப்பட்டிருந்தமையால் 22 தகடுகள் ரூபா 349 படி ரூபா 7,678 இருப்பில் மேலதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) துருசவிய நிதியத்தின் கணக்கீட்டுக் குறிப்புகளின் பிரகாரம், வேறு வருமானம் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வேறு வருமானத்தில் உள்ளடங்கியிருந்த அங்கத்துவப் பண வருமானம், காசு அடிப்படையில் கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தன.

### 1.2.2 விளக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தால் நிலத்தராசு, சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகையில் பல்வேறு விலைகளுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் இதில் கூடிய விலைக்குக் கொள்வனவு செய்யப்பட்ட சங்க உறுப்பினர்களுக்கு அநியாயமும் இதன் மூலம் மோசடி ஏற்படக்கூடும் என்பதும் அவதானிக்கப்பட்டது.

| தராசொன்று விற்பனை செய்யப்பட்ட தொகை | சங்க எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா |
| 14,790.00 | 6 | 88,740.00 |
| 9,000.00 | 3 | 27,000.00 |
| 15,000.00 | 1 | 15,000.00 |
| 13,378.75 | 1 | 13,378.75 |

பெரும்பாலான துருசவிய சங்கங்களால் நிலத்தராசு மானிய விலையில் கோரப்பட்டிருந்ததுடன் நிதியத்தால் அத் தராசு சங்கங்களுக்கு வழங்கப்பட்டமையைக் கருத்திற்கொள்ளாது தனி நபர்களுக்கு குறைந்த விலைக்கு விற்பனை செய்து ஏற்பட்ட நட்டத்தொகையான ரூபா 23,160 மீளாய்வாண்டின் போது கணக்கில் சீராக்கப்பட்டிருந்தன.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

(அ) துருசவிய சங்கங்களிலிருந்து துருசவிய நிதியத்திற்கு அறவிடவேண்டிய ரூபா 1,343,702 கூட்டுத்தொகையான கடன் தொகை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக அறவிடவேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. இவ் அறவிட வேண்டிய கடன் மீதிகள் தொடர்பாக மீதிகளின் உறுதிப்படுத்தல்களும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எரிபொருளுக்கான வைப்பாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 25,000 தொகையில் நிலுவையான எரிபொருள் தொகை மீதியான ரூபா 7,260 தொகை கழிக்கப்பட்டதை அடுத்து உள்ளபடியான வைப்புத்தொகை ரூபா 17,740 ஆகக் காண்பிக்கப்பட்டது. இதன் பிரகாரம், மேலதிக ரூபா 7,260 தொகை வைப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| 1993.12.31 ஆம் திகதிய பீஜீஏ/6/1/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகச் சுற்றறிக்கை | நிதியத்தின் தலைவர் ரூபா 466,408 தொகையான செலவினத்தை ஏற்று இத்தாலிப் பயணத்தில் ஈடுபட்டிருந்ததுடன் பயணத்தினால் நிதியத்திற்கு ஏற்பட்ட பயன், புதிய கருத்துக்கள் தொடர்பான ஓர் அறிக்கை 2013 ஒக்டோபர் 14 ஆம் திகதியில் உள்ளவாறும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் நிதியத்தின் செயற்பாட்டு விளைவு திறைசேரியிலிருந்தும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்தும் பெறப்பட்ட ரூபா 18,346,430 ஆன மானியத்தைக் கணிப்பிடப்பட்டதை அடுத்து ரூபா 476,904 தொகையான மிகை காணப்பட்டதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 11,786,774 மானியத்தினைக் கணக்கிற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் ரூபா 3,293,692 பற்றாக்குறை ஏற்பட்டமையால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 3,770,596 தொகையான அதிகரிப்பைக் காட்டியது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 18,638,936 ஆன நிதியத்தின் மொத்தச் செலவினத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 8,083,739 தொகையே செலவிடப்பட்டிருந்தது. அதாவது 43 சதவீதம் மாத்திரமாகும்.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட ரூபா 24,992,100 தொகையான செலவினம் நிதியீட்டப்பட்டமைக்காக நிதியத்தால் ரூபா 1,013,000 தொகையான சுய வருமானத்தைச் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது இதில் ரூபா 764,930 தொகையே சேகரிக்கப்பட்டிருந்தது. இது 76 சதவீத வருமானம் மாத்திரமேயாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

2000 இன் 23 ஆம் இலக்க துருசவிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், துருசவிய நிதியத்தை ஸ்தாபிக்கும் நோக்கத்தை எய்துவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 671 துருசவிய சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. பல சங்கங்கள் செயற்படாத நிலையில் இருப்பதும், சங்கங்களின் மூலம் அங்கத்தவர்களுக்கு நிறைவேற்றப்படுகின்ற கடமைப்பொறுப்புக்கள் எவ்வாறானவை என்பது தொடர்பாக முறையான விளக்கம் அவர்களுக்கு மத்தியில் இல்லாத சங்கங்களும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. ஆண்டின் போது 04 சங்கங்கள் புதிதாகப் பதிவு செய்துகொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) சங்கங்களினால் காலாண்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுடன் பதிவுசெய்து கொள்ளப்பட்ட 671 சங்கங்களில் 600 சங்கங்கள் 2012 ஆம் ஆண்டிற்காக அரையாண்டு அறிக்கைகளைக்கூட அனுப்பிவைத்திருக்கவில்லை.

(இ) தற்போது செயற்பாட்டு சங்கங்களின் செயற்திறன் மதிப்பீட்டு செயற்பாட்டு நடைமுறைகளைக் கொண்டிராமை அரையாண்டு அறிக்கைகளின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், கண்டறியப்பட்டது.

(ஈ) மாவட்ட மட்டத்தில் நிதியத்தால் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் கண்காணிப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் உற்பத்தி நிலையை ஊக்குவிப்பதற்காக இறப்பர் சுருள் சோடி, கூட்டமைப்பு நிலையங்களால் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றைப் பயன்படுத்துவது தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமைக்காக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சங்கங்கள் அமைக்கப்பட்டு வலுப்படுத்துவதற்காக ரூபா 462,527 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் செலவினம் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமைக்காக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் போது 25 விழிப்புணர்ச்சி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 635,058 தொகை செலவிட்டு இதில் 18 மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது.

(ஏ) 2012 ஆம் ஆண்டில் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கூட்டத்திட்ட நிலைய நிர்மாணிப்பிற்காக ரூபா 9 மில்லியன் 4 சங்கங்களுக்கு வழங்கப்படுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த போதிலும் வழங்கப்பட்ட கால எல்லையில் உரிய செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

துருசவிய நிதியத்தின் மூலம் அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற அங்கத்துவப் பணம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒவ்வொரு சங்கங்களிலிருந்து பெறவேண்டிய அங்கத்துவ நிதியம் மற்றும் ஆண்டின் போது பணமாகப் பெறப்பட்டவை முறையாக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கத்துவ பணத்திலிருந்து துருசவிய நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்ட 50 சதவீத பணத்திற்காக முறையான அறிக்கை பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) சேகரிக்கப்படுகின்ற அங்கத்துவப் பணத்தில் அங்கத்தவர்களுக்கு நலன் வழங்கக்கூடிய வகையில் முறையான வேலைத் திட்டம் ஒன்று இனங்காணப்படாததன் காரணமாக துருசவிய நிதியத்தால் எடுக்கப்பட்ட பல

தீர்மானங்கள் துருசவிய சங்கத்தின் மூலம் அமுலாக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது

(ஈ) அங்கத்துவப் பணம் செலுத்தப்படுகையில் சங்க அங்கத்தவர்களுக்கு சங்கத்தால் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படுகையில் அவை பின்னர் மாற்றப்படல், பற்றுச்சீட்டுக்கள் தொடரிலக்க அடிப்படையில் வழங்கப்படாமை, பல்வேறு இலக்கங்களில் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருத்தல், சங்கத்தாலும் தலைமை அலுவலகத்தாலும் ஒரு அங்கத்துவப் பணம் பெறப்படுவதற்காக 2 பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருத்தல்.

(உ) எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள், அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் இணக்கப்பாடு காணப்பட்டிராததுடன் சீராக்கங்கள் மீள அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. கண்காணிக்கப்படாத மற்றும் அங்கீகரிக்கப்படாத செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான போக்குவரத்துச் செலவினங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டின் போது மீண்டுவரும் செலவுகளுக்காக அரசாங்கத்தினால் ரூபா 10,292,000 தொகை நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த மானியத்தினை வழங்கும் போது நிதியத்தினால் 2012 சனவரி 01 ஆந் திகதி முதலீடு செய்யப்பட்ட ரூபா 4,151,268 தொகை திறைசேரிக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இம் முதலீட்டின் பெறுமதி ரூபா 4,564,211 ஆக இருந்தது.

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(அ) துருசவிய நிதியத்தினால் இறப்பர் ரோல் இயந்திரக் கொள்வனவிற்காக இறப்பர் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுவதால் இறப்பர் ரோல் இயந்திரத்தின் தரம் மற்றும் குறைந்த விலை கருத்திற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாது ரூபா 173,280 தொகையான சிக்கனமற்ற செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நியமத் தரத்தினைக் கொண்டிராததன் காரணமாக 2008 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 743 பால்வெட்டும் கத்திகளில் 575 பால் வெட்டும் கத்திகள் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் அவை

துருப்பிடித்திருந்தன. 2012 ஆம் ஆண்டின் போது அவை அங்கத்தவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டிருந்தன.

## 4. கணக்களி தன்மையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது 11 செலவு விடயங்கள் தொடர்பாக 5 சதவீதத்திலிருந்து 664 சதவீதம் வரை பாதீடு செய்யப்பட்ட செலவினை மிகைத்து செலவு செய்யப்பட்டிருந்தமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) இருப்புக் கட்டுப்பாடு
(இ) கொடுப்பனவு நடைமுறை
(ஈ) துருசவிய சங்கங்களை முறையாகப் பதிவுசெய்தல்
(உ) செயலாற்றல் நடைமுறை
(ஊ) வருமான இனங்காணல்